திருவண்ணாமலை, வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறைகள்

வழங்குநர்–திரு.மீ.சு.செண்பகராஜ், எம்.எஸ்ஸி.,(விவ).,

எண்.அ2/16300/2017(3/6) நாள் .26.04.2018

பொருள்- பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – 2015–2016ம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தொகுதி–4ல் அடங்கிய பணிகள் – நேரடித் தேர்வு மூலம் இளநிலை உதவியாளர்(பிணையம்)/கிடங்கு மேலாளர்(தரம்–3) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்தது – பணி நியமன ஆணை வழங்கியது – கிடங்கு மேலாளர்(தரம்–3) பதவியில் பணிவரண்முறை செய்து உத்தரவிடல் – தொடர்பாக.

பார்வை–1. சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண். அநிபி.4/ 85995 /2017–2 , நாள்.01.11.2017.

2. இவ்வலுவலகச் செயல்முறை ஆணை எண். அ2/16300/2017(5), நாள். 08.11.2017

3. வேளாண்மை இயக்குநர், சென்னை அபபி.3/155922/2017–1, நாள்.31.01.2018.

-----

ஆணை :–

பார்வை 1–ல் காணும் செயல்முறை ஆணைகளின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் 2015–2016–ம் ஆண்டிற்கான தொகுதி 4–ல் அடங்கிய பணிகளுக்கு நேரடி போட்டித் தேர்வின் மூலம் இளநிலை உதவியாளர்(பிணையம்) / கிடங்கு மேலாளர்(தரம்–3) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, ரூ.19500–62000 (புதிய ஊதிய விகிதம்) என்ற ஊதிய விகிதத்தில் கிடங்கு மேலாளர்(தரம்–3)ஆகப் பணிநியமன ஆணை வழங்கிடும் பொருட்டு, செல்வி.பி.பாரதி அவர்களுக்கு இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்து வரப்பெற்றது.

பார்வை 2–ல் காணும் இவ்வலுவலகச் செயல்முறை ஆணையின்படி, செல்வி.பி.பாரதி அவர்களுக்கு வேளாண்மை உதவி இயக்குநர், வெம்பாக்கம் கட்டுப்பாட்டில் காலியாக உள்ள மாமண்டூர் துணை வேளாண்மை விரிவாக்க மைய கிடங்கு மேலாளர் (தரம்–3) பணியிடத்தில் பணிநியமனம் செய்து உத்தரவிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து, செல்வி.பி.பாரதி அவர்கள் 16.11.2017 முற்பகல் பணியில் சேர்ந்து கொண்டார்.

பார்வை 3–ல் காணும் கடிதத்தில் வழங்கிய அறிவுரையின்படி, செல்வி.பி.பாரதி அவர்கள் கிடங்கு மேலாளர்(தரம்–3)ஆகப் பணியில் சேர்ந்த நாளான 16.11.2017 முற்பகல் முதல் இவரின் பணியினை வரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

இவரை முன்றாண்டு தொடர் பணிக்காலத்தில், இரண்டாண்டு பணிக்காலம் தகுதிகாண் பருவத்தில் வைத்தும், இவர் தகுதிகாண் பருவம் முடித்தமைக்கான உத்தரவு வழங்கிய பின்னரே இரண்டாவது மற்றும் அதனைத் தொடர்ந்த ஊதிய உயர்வுகள் வழங்கப்படும் எனவும் உத்தரவிடப்படுகிறது.

மேற்காணும் பணிவரன்முறை உத்தரவு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மதுரை உயர்நீதிமன்றக்கிளையில் நிலுவையில் உள்ள தொகுதி 4ல் அடங்கிய பணிகளில் 2015–2016 வரையிலான காலங்களில் வழங்கப்பட்ட பணிநியமனங்கள் மீது தொடரப்பட்ட வழக்குகளின் இறுதி தீர்ப்பிற்குட்பட்டது என்ற நிபந்தனையுடன் வழங்கப்படுகிறது.

(ஒம்)மீ.சு.செண்பகராஜ்,
வேளாண்மை இணை இயக்குநர்,
திருவண்ணாமலை

பெறுநர்

செல்வி.பி.பாரதி,
கிடங்கு மேலாளர்(தரம்–3)
துணை வேளாண்மை விரிவாக்க மையம், மாமண்டூர்.

வழி மற்றும் நகல்– வேளாண்மை உதவி இயக்குநர், வெம்பாக்கம்.

நகல்– வேளாண்மை இயக்குநர், சென்னை – தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.
(அபபி–3 பிரிவிற்கு)

நகல்– அ2 முக்கிய ஆணைத்தொகுப்பிற்கு.

// உத்திரவுப்படி //

ஆட்சி அலுவலர்